விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.20 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 12.45 p.m

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No : CC.No.100/2024

Prosecution side witness : அ.சா.1 Date : 11.03.2025

| | |
|---|---|
| Name : சேட்டு | Taluk : மேட்டூர் |
| Fahter Name : சின்ன தம்பி | Calling : டிரைவர் |
| Village : சீரங்கனூர் | Age : 40 |

( All accused present. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் சீரங்கனூரில் குடியிருக்கிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். எனக்கு எதிரிகளுக்கு வீடு சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 1 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தேன். என் வீட்டை பூட்டி விட்டார்கள். நான் பூட்டை உடைத்துவிட்டேன். 4 எதிரிகளும் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சத்தம் போட்டார்கள். 4 எதிரிகளும் என்னை கையால் அடித்துவிட்டார்கள் அதில் ராமசந்திரன் என்பவர் அவர் அணிந்திருந்த காப்பை கழுட்டி என்னுடைய நடு நெற்றியில் அடித்துவிட்டார். நான் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். இது சம்மந்தமாக மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்கள். 4 வதாக இருப்பவர் தான் எதிரி ராமசந்திரன்.

போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி மாணிக்கம் என்பவர் என்ன உறவு முறை என்றால் அண்ணன். மற்ற எதிரிகள் அனைவவரும் என்ன உறவு முறை என்றால் இறந்து போன என் அண்ணன் சித்தயன் மகன்கள் ஆகும். என் அண்ணன் சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். எந்த வண்டிக்கு டிரைவாக செல்கிறேன் என்றால் லாரிக்கு டிரைவாக செல்கிறேன். லாரி சங்ககிரியை சேர்ந்தது. வீட்டை எப்போது பூட்டினார்கள் என்றால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது தான் பூட்டினார்கள். சம்பவம் நடைப்பெறும் போது நான் வீட்டில் இருந்தேனா என்றால் இல்லை சங்ககிரி சென்று விட்டேன். என் மனைவி தான் தகவல் கொடுத்தார் நான் பின்னர் வந்தேன். நான் பூட்டை உடைத்துவிட்டேன். 2 முதல் 4 வரை எதிரிகள் கர்நாடகா மாநிலத்தில் கல் உடைக்கும் தொழில் செய்து வருகின்றன. மாணிக்கம் நான் குடியிருக்கும் வீட்டின் தென்புறமாக குடியிருக்கிறார் என்றால் சரிதான். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் நாள் அன்று குடித்திருந்தேனா என்றால் இல்லை. குடிக்கும் பழக்கம் உண்டு. பிரச்சனை நடந்தாக சொல்லப்படும் வீடு பூர்விகமான வீடு என்றால் சரிதான். அதில் என் உடன் பிறந்த 6 பேருக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். வீட்டை பிரிப்பதை பற்றி பேசவில்லை. தற்போது சொல்வது போல் தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் நேரத்தில் என் மனைவி என்னை அழைத்துக்கொண்டு பேருந்தில் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார் என்றால் சரிதான். போலீசார் எத்தனை நாட்கள் கழித்து வந்து விசாரித்தார்கள் என்றால் 3 நாட்கள்

கழித்து விசாரித்தனர். இந்த வழக்கில் என் மனைவி சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் நான் சொல்ல சொல்ல தான் போலீசார் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசாரிடம் வாக்குமூலத்தில் என்னை 4 எதிரிகள் அடித்தாகவும், அதில் ராமசந்திரன் என்னை நடு நெற்றியில் காப்பால் குத்தினார் என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் மொத்தம் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலம் என இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் சமயத்தில் பக்கத்தில் 50 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு உள்ளவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 10 நாட்கள் மருத்தவமனையில் இருந்தேன். மருத்துவமனையிலும் நடு நெற்றியில் குத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். டிஸ்சார்ஸ் ஆன உடன் காவல் நிலையம் சென்றேன் அங்கு என்னை விசாரிக்கவில்லை. போலீசார் 10 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை போடலமா அல்லது வேண்டமா என்று என்னிடம் விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு என்னிடம் எந்த ஒரு விசாரணையும் செய்யவில்லை. நான் குடியிருக்கு வீடு பூர்விக வீடு என்றும் 1ம் எதிரி மாணிக்கம், 2 முதல் 4 எதிரிகளுக்கு பாகம் கொடுக்க சொல்லி கேட்டார் என்றும் நான் போதையில் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி கீழே விழுந்து அடிப்பட்டது. அதில் காயம் ஏற்பட்டதில் எதிரிகள் அடித்தாக 4 நாட்கள் கழித்து பொய் புகார் கொடுத்து அதன் பேரில் சரியான விசாரணை செய்யாமல் இந்த வழக்கு

தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கு சம்மந்தமும் இல்லை என்றும் நான் சொல்வது போல், சொன்ன தேதியில் எந்த வித சம்மமும் நடைபெறவில்லை என்றும் பாகம் கொடுக்காமல் இருக்க எதிரிகளை பயமுறுத்துவதற்காக ஒரு பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**